<u>மறுமைக்குரிய ஆசீர்வாதம்.... நித்திய ஜீவன் (1)</u>
life everlasting, eternal life, Life after death., Life in Heaven…..

**“.... <u>மறுமையிலே நித்தியஜீவனையும்</u> அடைவான் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்....”** (மாற்கு 10:30)

”ஆத்மா என்றென்றைக்கும் அழியாதது, உடல் அழிந்துபோகக்கூடியது”
இது அனைவரும் அறிந்த ஒரு நம்பிக்கை.
இந்த நம்பிக்கையின் அடிப்படையில், ஆத்மா நமது இறப்புக்குப் பிறகு சாந்தியடையவும் கடவுளோடு ஐக்கியம் கொள்ளவும் வாஞ்சிக்கிறோம்.
இப்படி ஒரு நிலையான வாழ்க்கை கடவுளோடு நமக்கு இருக்கிறது என்று ஏதோ ஒரு வகையிலே ஒவ்வொரு மக்களும் நம்புகிறார்கள். அவர்களுக்கு தெரிந்த அளவிலே கடவுளை அடைய பல காரியங்களை மிகவும் பயபக்தியோடு செய்கிறார்கள்.
அளவிடமுடியாததும் அழிவில்லாததுமான கடவுளின் <u>மகிமையை</u> அறிந்து கொள்ள நமது அறிவாலே மட்டும் முடியாது. அப்படிப்பட்ட கடவுளை அடைய நம்முடைய முயற்சியின் <u>நம்பிக்கை</u> மட்டும் போதாது.

பரிசுத்தத்தில் மகத்துவமுள்ள ஆண்டவர், நமது ஆத்மாவிற்கு ஜீவனைக் கொடுத்து நம்மை ஜீவாத்மாவாக வாழ வழிவகுத்தவர். அவருடைய வழியிலிருந்து தவறி, பாவத்தில் வீழ்ந்து ஆத்மாவின் ஜீவனை இழந்த நம்மை, மீண்டுமாக ஜீவனைக் கொடுத்து, அவரிடத்திலே ஐக்கியம் கொள்ள ஒரு புதிய ஏற்பாட்டை உருவாக்கினார். ஆண்டவரே கிறிஸ்துவாக இந்த பூமிக்கு வந்து இதை செய்து முடித்தார்.

**“...தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்...”** (யோவான் 3:16)
**“...இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்குக் கிடைக்கும் பலன், முடிவோ நித்தியஜீவன்...”**
**“...பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்...”** (ரோமர் 6:22,23)

நம்முடைய இம்மைக்குரிய இவ்வுலக வாழ்க்கைக்குப் பிறகு,
நாம் அடைய வேண்டியது மறுமைக்குரிய நித்தியஜீவ வாழ்க்கை.
நமக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தவர்
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து.
**வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, என்னைக்குறித்துச் சாட்சிகொடுக்கிறவைகளும் அவைகளே.** (யோவான் 5:39) என்று இயேசுகிறிஸ்து சொல்கிறார்.
தொடர்ந்தும் வேதத்தை வாசித்து, சிந்தித்து, ஜெபித்து தியானியுங்கள்.
ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.
*(தொடர்ந்தும் இதுபற்றி சிந்திப்போம். நன்றி.)*